**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 8/2024 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அமல புஷ்பம் | த–பெ / க.பெ. | பிலேவேந்திரன் |
| ஊர்: | : | அம்மாஏந்தல் | சமயம்: | |
| வயது: | : | 51/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2026**

---

**09.06.2026**

**<u>முதல் விசாரணை:</u>**

1) என் வீட்டின் அருகே உள்ள கணக்கன்பட்டியில் உள்ள பள்ளியில் எதிரி முனியசாமி மற்றும் அவரது மனைவி முனீஸ்வரி வேலை செய்து வந்தனர். நான் விவசாயம் செய்து காய்கறி வியாபராம் செய்வேன், எதிரி மற்றும் அவர் மனைவி என்னிடம் 6 வருடங்களாக காய்கறி வாங்குவதால் பழக்கம் ஏற்பட்டது. 2019 பிப்ரவரியில் என் மகளின் திருமணத்திற்காக பணம் ரூ.3,50,000/- முனீஸ்வரியிடம் கேட்டேன்.அதற்கு முனீஸ்வரி அவரிடம் பணம் இல்லை என்றும், முத்து மணிகண்டன் என்பவரிடம் பணம் பெற்றுதருவதாக கூறினார். முத்து மணிகண்டனிடம் இருந்து கடன் பெறுவதற்காக பத்திர ஆவணம் தேவை என்று முனீஸ்வரி என்னிடம் கூறினார். முத்து மணிகண்டனிடம் இருந்து முனீஸ்வரி பணம் பெற்றும் ரூ. 3,50,000/- முனீஸ்வரி என்னிடம் 2019 பிப்ரவரியில் கொடுத்தார். மறுநாள் நான் எனது வீட்டுபத்திரத்தின் அசலை முனீஸ்வரியிடம் கொடுத்தேன்.

வட்டி என்ன என்று கேட்டபோது, முத்து மணிகண்டன் 1 சதவீதம் எடுத்துக்கொள்வார் என்றும், முனீஸ்வரிக்கு 2 சதவீதம் வேண்டும் என்று கூறி மொத்தமாக 3 சதவீத மாதம் வட்டி என முனீஸ்வரி என்னிடம் தெரிவித்தார். மாதம் 2 ம் தேதியில் ரூ.10,500/- வட்டிக்காக முனீஸ்வரி மற்றும் அவரது கணவர் என் வீட்டிற்கு வந்து பெறுவார்.

2) முதல் 6 மாதங்கள் வட்டி செலுத்தினேன். அதன் பின்னர் நான் கொடுத்து வைத்திருந்த பத்திரத்தை முனியசாமி பெயரில் பதிந்து தரும்படி என்னிடம் கேட்டார்கள், எனது நிலத்தின் மதிப்பு சுமார் 40,00,000/- ஆகும். பதிந்து தருவதற்கு நான் மறுத்தேன், அதனால் என் கணவரின் ATM card ஐ முனியசாமி கேட்டார். அதை தர மறுத்தேன், அதற்கு வேறு ஏதாவது ஆவணம் தரவேண்டும் என்று கேட்டு எனது பெயரில் உள்ள ATM card, ஆதார் கார்டு நகல், ரேசன் கார்டு நகல் மற்றும் எனது கையொப்பம் செய்த காசோலை பெற்றுக்கொண்டார். 20.11.2020 அன்று என் கணவர்ரூ.3,50,000/- பணத்தை கொடுத்து செட்டில்மெண்ட் செய்வதற்காக காரைக்குடி வந்தார். முனியசாமி மூலமாக முத்து மணிகண்டனை சந்தித்து பணம் ரூ.3,50,000/- முத்து மணிகண்டனிடம் என் கணவர் பிலவேந்திரன் வங்கியில் இருந்து அவரது வங்கிக்கு அனுப்பப்பட்டது. **(20.11.2020 தேதிக்கான பிலவேந்திரனின் SBI வங்கி கணக்கு பரிவர்த்தனை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முத்து மணிகண்டன் எனது நிலபத்திரத்தை திருப்பி கொடுத்துவிட்டார், மற்ற ஆவணங்கள் எதுவும் அவரிடம் இல்லை. மற்ற ஆவணங்கள் புகார்தாரரின் வீட்டில் உள்ளது என்றும் அதை பின்பு தருவதாக என்னிடம் கூறினார். அதன் பின்பு நான் புகார்தாரர் மற்றும் அவரது மனைவி பணி மாறுதலில் சென்றுவிட்டார்கள். 2021 ஜூன் மாதம் முதல் புகார்தாரரின் மனைவிக்கும் எனக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை. காசோலை மற்றும் மற்ற ஆவணங்கள் அவர்களிடம் இருந்தது. அதன் மூலமாக எனக்கு எந்த ஒரு

பிரச்சனையும் இல்லை என்று நினைத்து நானும் அதை திருப்பி கேட்காமல் விட்டுவிட்டேன்.

3) அதன் பின்பு எனது காசோலையை தவறாக புகார்தாரர் பயன்படுத்தி தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.6 புரோநோட்டில் நான் நிரப்பவில்லைஅதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. ம.சா.ஆ.1 வழக்கு காசோலையை நான் நிரப்பவில்லை அதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை, கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். நான் புகார்தாரரிடம் இருந்து எந்த ஒரு கடனும் பெறவில்லை. முத்து மணிகண்டனிடம் இருந்துதான் பணம் பெற்றேன், அதை நான் அப்போதே திருப்பி செலுத்திவிட்டேன். நான் எந்த ஒரு நிலுவையும் புகார்தாரருக்கு மற்றும் முத்து மணிகண்டனுக்கு வைக்கவில்லை. புகார்தாரர் எனது காசோலையை பயன்படுத்தி தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(புகார்தாரர் கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.09 08:39:56 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், , காரைக்குடி.